## தமிழ்நாட்டிற்கு பேரிடர் நிதி என்ன ஆயிற்று? மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்காதது ஏன்?

## பா.ஜ.க. வுக்கு வாக்களிக்கவில்லை என்பதால்

# தமிழ்நாட்டு மக்களை பிரதமர் வன்மத்துடன் தண்டிப்பதா?

## மக்களவையில் – கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதிமாறன் ஆவேசம்!

**புதுடெல்லி, ஜூலை 27 - "தமிழ்நாட்டு மக்கள் பா.ஜ.க.வுக்கு வாக்களிக்கவில்லை என்பதால் பிரதமர் வன்மத்துடன் தமிழ்நாட்டு மக்களை தண்டிப்பதா?" என்றும் "தமிழ்நாட்டிற்கு பேரிடர் நிதி ஒதுக்காதது ஏன்" என்றும் "மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அனுமதி தராதது ஏன்?" என்றும் நாடாளுமன்ற மக்களவையில் கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் கடும் கண்டனம் தெரிவித்தார்.**

மக்களவையில் தயாநிதிமாறன் பேசியதாவது:-

வாழ்க தமிழ்!

"நான் தமிழனாக பிறக்கும் பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லையே, நான் தமிழனாக பிறக்காதது எனது துரதிர்ஷ்ட வசமானது. அடுத்த பிறவியிலாவது நான் தமிழனாகப் பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். தமிழ் உலகிலேயே சிறந்த மொழி! நான் தமிழ் மொழியையும், தமிழக மக்களையும் மிகவும் நேசிக்கிறேன்." இதெல்லாம் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் முதல் கட்டமான தமிழ்நாட்டின் தேர்தலுக்கு முன் பேசியது.

தமிழ்நாடு தேர்தல் முடிந்து, கடைசி கட்ட தேர்தலின்போது, ஒரிசா சென்றதும், என்ன சொல்கிறார்? "ஒரிசாவின் அரசாங்கத்தை எப்படி ஒரு தமிழனிடம் கொடுக்க முடியும்?" என தன் கோபத்தைக் காட்டினார். இவையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள்.

### பிரதமரின் நெஞ்சில் வன்மம்!

அப்போது நீங்கள் ஏமாற்ற முயற்சித்தது போல், இந்த பட்ஜெட்டிலும் உங்கள் ஏமாற்று வேலையை காட்டிவிட்டீர்கள்! அதுமட்டுமல்லது, தமிழ் மொழியை ஆதரிப்போம் என்று கூறினீர்கள். நீங்கள் எங்கு சென்றாலும் எங்கள் திருக்குறளைப் பேசினீர்கள், எங்கள் இதயங்களை கவர முயற்சி செய்தீர்கள். ஆனால், உங்கள் நெஞ்சத்தில் உள்ள வன்மத்தை இன்று தமிழ்நாட்டு மக்களுக்கு காட்டிவிட்டீர்கள்.

சபாநாயகர் அவர்களே, பட்ஜெட் பற்றி பேச அதிக நேரம் எடுத்துக்கொள்ள மாட்டேன், ஏனென்றால் பேசிய பாஜக உறுப்பினர்கள் கூட பட்ஜெட் பற்றி பெரிதாக பேசவில்லை. ஐயா, பிரதமர் அவர்கள் நல்ல அறிவுரைகளை எடுத்துக்கொண்டு நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் போல் நடந்து கொண்டால் நன்றாக இருக்கும்.

### வாக்குறுதிப்படி நடந்துகொண்ட எங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டு முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் "நான் எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல வாக்களிக்காதவர்களுக்கும் சேர்ந்து உழைப்பேன், பாடுபடுவேன்" என்றும், "அதுதான் என் கடமை" என்றும் கூறினார், அவ்வாறே நடந்து கொண்டிருக்கிறார்கள். "

தேர்தலுக்கு முன் மோடியின் உத்தரவாதம் என்ற விளம்பரத்தை பல கோடி ரூபாய் செலவில் ஒன்றிய அரசு மேற்கொண்டது. அந்த வகையில் நீங்கள் எங்கு சென்றாலும் தொலைக்காட்சிகள், வானொலிகள், செய்தித்தாள்கள் என அனைத்திலும் பொதுமக்களின் பணத்தை வைத்து பிரதமரை போற்றி விளம்பரப் படுத்தினீர்கள். ஆனால் இன்று என்ன நிலவரம்? மோடிக்கு காப்பீடு. என்ன காப்பீடு? அவரின் பிரதமர் பதவியை தக்க வைக்க, பொதுமக்களின் செலவில் இந்த பட்ஜெட்டின் மூலம் பிரீமியம் செலுத்தி, அவரின் பதவிக்கு காப்பீடு வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

### மெட்ரோ ரயில் திட்டத்துக்கு பதில் இல்லை!

மூன்றாண்டுகளாக சென்னை மெட்ரோ ரயிலுக்கான ஒன்றிய அரசின் பங்கு நிதி நிலுவையில் உள்ளது. நமது முதல்வர் இந்த நிதிக்காக பலமுறை வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார். சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்ட திட்டத்துக்காக 50% நிதியை வழங்க வேண்டிய ஒன்றிய அரசு, இன்று வரை ஒரு ரூபாய் கூட தரவில்லை. இந்நிலையில் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லையென்றாலும் தமிழ்நாடு அரசே நிதி வழங்கும் என்று சொல்லி, மாநில நிதிநிலை அறிக்கையில் 12,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறார் எங்கள் முதலமைச்சர்.

ஐயா, நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்... நீங்கள் கோயம்புத்தூர் சென்றீர்கள், ரோட் ஷோ நடத்தினீர்கள், பிரதமர் கோயம்புத்தூர் மக்களின் மனதை கவர முயன்றார். தமிழ்நாடு அரசு உங்களிடம் ஒரு திட்டத்தை அனுப்பியது கோவை மற்றும் மதுரை மாநகரங்களுக்கு மெட்ரோ ரயில் திட்டம் கொண்டு வர வேண்டும் என்று. அதற்கும் இன்று வரை பதில் இல்லை.

தாம்பரம் செங்கல்பட்டு பறக்கும் மேம்பாலம் அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது. அதுகுறித்தும் இன்று வரை உங்களிடம் இருந்து ஒரு அறிக்கை கூட வரவில்லை.

கடந்த 10 ஆண்டுகளாக நடுத்தர வர்க்க மக்கள் பணவீக்கத்தின் சுமையை சுமந்து கொண்டிருக்கிறார்கள். உணவுப் பொருட்களின் விலை உயர்வு, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வு என மற்ற சுமைகளையும் கூட தாங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

### வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்!

தற்போது, ரஷ்யா உக்ரைன் போர் நடந்து வருவதால், மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை நேரடியாக வாங்காத சூழலில், இந்தியா ரஷ்ய எரிபொருளை நேரடியாக வாங்கியது. ஒரு பீப்பாய் பெட்ரோலியத்தின் விலை 120 டாலர் என்றால், இந்தியாவிற்கு 60 டாலருக்குக் கிடைத்தது. இந்த விலை குறைப்பால் இந்தியர்கள் யாருக்காவது நன்மை உண்டா? என்றால் இல்லை. ஏனென்றால் அவ்வாறு குறைந்த விலையில் பெறப்பட்ட கச்சா எண்ணெய்கள் நேரடியாக நமது பிரதமரின் சுத்திகரிப்பு ஆலைகளுக்குச் சென்று, டீசல் மற்றும் பெட்ரோலாக மாற்றி சுத்திகரிக்கப்பட்டு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்து அதன் சந்தை விலைக்கே விற்கப் பட்டது. அனால் நீங்கள் இந்தியாவில் முதன்முறையாக காற்றமுத்த வரி என்று திடீர் வரிகளை கொண்டு வந்தீர்கள்.

Sir, I would like to ask the Finance Minister why do you not give us a white paper on the windfall taxes and how much of money Ambanis and Adanis made because of the Ukraine war.

உக்ரை போரின் மூலம் அம்பானி மற்றும் அதானி எவ்வளவு பணம் சம்பாதித்தனர் என்றும் இந்த காற்றமுத்த வரி மூலம் பெறப்பட்ட வருவாய் எவ்வள்வு என்பது குறித்தும் ஒன்றிய நிதி அமைச்சர் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

வருமான வரியில் கணிசமான நிவாரணம் வழங்க நிதியமைச்சருக்கு மனமில்லை. ஏனென்றால், 2023ம் ஆண்டில் குடும்ப சேமிப்பு விகிதமானது, மொத்த தேசிய செலவழிப்பு வருவாயில் 5.2 சதவீதம் என்ற மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. அப்படி இருக்கும் பட்சத்தில் ஒரு சாமானியனுக்கு என்ன கிடைக்கும்? மாதம் வெறும் ரூ.1058 மட்டுமே மிச்சமாகும். இதைத்தான் சேமிப்பு என்று இவர்கள் பேசுகிறார்கள்.

நிதியமைச்சர் அவர்கள், நீர்ப்பாசனம் மற்றும் வெள்ளத் தணிப்பு தொடர்பான இலக்கு திட்டங்களை அறிவித்துள்ளீர்கள். கோசிமெச்சி என்னும் மாநிலங்களுக்கு இடையேயான இணைப்பு திட்டத்திற்கான நிதியை பீகார் பெற்றுள்ளது. அசாம், சிக்கிம், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்கள் வெள்ள மேலாண்மைக்கு உதவி வருகின்றன. இமாச்சலப் பிரதேசம் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுக்கான உதவியையும் பெற்று வருகிறது.

### நிதி அமைச்சர் இவ்வாறு பேசலாமா?

தமிழ்நாட்டிற்கு என்ன செய்துள்ளீர்கள், சென்னை இதுவரை காணாத வெள்ள பேரிடர் கண்டது, தூத்துக்குடியில் 150 ஆண்டுகளில் வரலாறு காணாத வெள்ளப் பேரிடர் கண்டது. நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் பேரிடரின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ள வந்தார், மக்களிடம் உதவுகிறேன் என்று உறுதி கூறினார், ஆனால் இன்றுவரை ஒரு ரூபாய் கூட பேரிடர் நிவாரண நிதியாக வழங்கவில்லை. அது மட்டுமல்ல கோவிலுக்கு சென்ற அவர் மக்களிடம் அவர்களது காணிக்கையை உண்டியலில் செலுத்த வேண்டாம் என்றும், அதற்கு பதிலாக நேரடியாக அர்ச்சகரிடமே கொடுக்க வேண்டும் என்று கூறினார். ஒரு நாட்டின் நிதியமைச்சர் இவ்வாறு பேசலாமா? நான் தமிழ்நாட்டின் மக்களிடம் வரிகளிடம் ஒன்றிய அரசிடம் செலுத்தாதீர்கள், அது நம்மிடம் திரும்ப வருவதில்லை என்று கூறினால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? பொது வாழ்வில் இருக்கும் ஒரு தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதி இவ்வாறு பேசலாமா? மன்னக்கவும் அவர்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அல்லவே, நியமிக்கப்பட்ட பிரதிநிதி தானே.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்



பலமுறை பிரதமரை சந்தித்து வெள்ள நிவாரண நிதியாக ரூ.37000 கோடியை தமிழ்நாட்டிற்கு தாருங்கள் என்று கோரிக்கை வைத்தார். அதில் இன்று வரை எவ்வளவு நிதி ஒன்றிய அரசு வழங்கியுள்ளது என்று தெரியுமா? வெறும் ரூ.276 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் பீகார் மாநிலத்திற்கு ரூ.11500 கோடியை ஒதுக்குவது பாரபட்சம் இன்றி நியாயம் என்று கருதுகிறார். குஜராத் மாநிலத்தில் வெள்ளம் வந்தபோது, பிரதமர் அவர்கள் அடுத்த நாளே அங்கு சென்று ரூ.1000 கோடி வெள்ள நிவாரணம் வழங்கினார். ஆனால் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு பல மாதங்கள் கடந்தும் தமிழ்நாட்டை கண்டுகொள்ளவில்லை.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை ஏன் வஞ்சிக்கிறது. எங்களது மக்களுக்குத் தேவையான திட்டங்களை வழங்க ஏன் மறுக்கிறது. தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டிற்கு சுற்றுலா வந்துவிட்டு சகோதர, சகோதரிகளே என்று கூறி ஏமாற்றினால் மட்டும் போதாது, தமிழ்நாட்டு மக்களுக்கு தேவையான நலத்திட்டங்களை செய்ய வேண்டும். இப்படி தொடர்ந்து தமிழ்நாட்டை மக்களை வஞ்சிக்கும் செயலை தமிழ்நாட்டு மக்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள்.

இப்போதாவது பா.ஜ.க அரசு எங்களது திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் நிர்வாகத் திறனை பின்தொடர துவங்கி விட்டார் என்பதில் மகிழ்ச்சி. அவரின் முன்னுதாரணத் திட்டங்களை தேசிய அளவில் இப்போது நீங்கள் செயல்படுத்துகிறீர்கள். ஆனால் ஒரு மாநிலம் செய்யக்கூடிய அளவிலான திட்டங்களை விட சற்றே அதிகமாக தான் ஒன்றிய அரசு செயல்படுத்துகிறது என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

எடுத்துக்காட்டாக சொல்ல வேண்டும் என்றால், திறன் மேம்பாட்டு திட்டம். இந்த ஆண்டின் பட்ஜெட்டில், நிதியமைச்சர் அவர்கள், இத்திறன் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 20 லட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்று அறிவித்துள்ளார். ஆனால் எங்களது தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆண்டுக்கு 15 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளார். ஒரு மாநில அரசு ஆண்டுக்கு 15 லட்சம் பேர் பயன்பெறும் வகையில் திட்டத்தை வகுத்து செயல்படுத்த முடியும் என்ற போது, மாநில அரசை விட பலமடங்கு அனைத்து வசதிகளையும் பெற்றுள்ள ஒன்றிய அரசு வெறும் 20 லட்சம் பேர் மட்டும்தான் பயன்பெறும் வகையில் திட்டங்களை அறிவிக்கிறது.

### திராவிட மாடல் விடுதிகள் எனப் பெயர் சூட்டுக!

எங்கள் திராவிட மாடலின் முத்திரை பதித்த திட்டமான "தோழி விடுதிகள்" திட்டத்தை நாடு முழுவதும் அமுல்படுத்தவுள்ளீர்கள், இதனை நாங்கள் வரவேற்கிறோம், நியாயமாக பார்த்தால், இந்த விடுதிகளை மகளிருக்கான திராவிட மாடல் விடுதிகள் என்று பெயர் சூட்ட வேண்டும். ஏனென்றால், இதற்கு முதலில் செயல் வடிவம் கொடுத்தவர் எங்கள் தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்தான். அதே போல், அவரின் நான் முதல்வன் திட்டத்தை திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டமாக நாடு முழுவதும் அமுல்படுத்தவுள்ளீர்கள். அதுமட்டுமா? இந்தியா கூட்டணியின் திட்டங்களான Apprentice திட்டம் மற்றும் Employment Linked Incentive திட்டங்களையும் செயல்படுத்தவுள்ளீர்கள். மகிழ்ச்சி. ஆனால் இதே திட்டங் களை செயல்படுத்தவே முடியாது என்று நிதியமைச்சர் முன்பு கூறினார் என்பதை அவர்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். எப்படி எந்த திடீர் மாற்றம் வந்ததோ? ஒருவேளை இத்திட்டங்களை முன்னாள் பிரதமர் நேரு அவர்கள் கொண்டு வராததாலோ என்னவோ ஒப்புக்கொண்டுள்ளனர் போல்.

### தென்னிந்திய மாநிலங்கள் புறக்கணிப்பு!

இம்முறை பா.ஜ.க. தமிழ்நாட்டில் சிறிது வாக்குகள் பெற்றுள்ளது. 2019 வரையில் நோட்டா உடன்தான் போட்டி போட்டுக் கொண்டிருந்தது. இந்த தேர்தலில் அதைவிட சிறிதளவு மக்கள் வாக்களித்து உள்ளார்கள், ஆனால் திமுக தலைமையிலான கூட்டணிதான் 40 தொகுதி களிலும் வெற்றி வாகை சூடியது. பா.ஜ.க கூட்டணி ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. இதனால்தான் ஒன்றிய நிதியமைச்சர் தமிழ்நாட்டை வஞ்சிக்கிறார் போலும்.

அதுமட்டுமல்ல ஆந்திர மாநிலத்தைத் தவிர தென்னிந்திய மாநிலங்கள் அனைத்துமே புறக்கணிக்கப்பட்டுள்ளன. இந்த பட்ஜெட்டில் அனைத்துத் திட்டங்களுமே பா.ஜ.க கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களான பீகார் மற்றும் ஆந்திரா மாநிலங்களுக்குதான் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு, கேரளம், தெலங்கானா, கர்நாடகா என அனைத்துமே புறக்கணிக் கப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்திற்கு உதவி வழங்குவதில் எங்களுக்கு எந்த ஒரு பிரச்னையும் அல்ல, ஆனால் அதற்கு எங்களை ஏன் புறக்கணிக்கிறீர்கள்.

### புதிய வரைபடத்தை உருவாக்கிய நிதி அமைச்சர்!

நிதியமைச்சர் நிர்மலா சீத்தாரமன் அவர்கள் மிகவும் படித்தவர் என்று நினைத்திருந்தேன். அவர் இப்போது இந்தியாவிற்கு புதிய வரைப்படத்தை உருவாக்கியுள்ளார். அவர் இந்தியாவின் கிழக்குப் பகுதியை புதிதாக வடிவமைத்துள்ளார். இந்த புதிய கிழக்குப் பகுதிக்குள் பீகார் மற்றும் ஆந்திர மாநிலங்கள் அடங்கியுள்ளது, மேற்கு வங்கமோ அதில் அடங்கவில்லை. ஆந்திர மாநிலத்துடன் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் தமிழ்நாடு மாநிலமோ இந்த புதிய கிழக்கில் இணைக்கப்படவில்லை. இது எப்படி உள்ளது என்றால், உங்களுக்கு வந்தால் ரத்தம், எங்களுக்கு வந்தால் தக்காளி சட்டினியா என்பதுபோல்தான் இருக்கிறது.

நிதியமைச்சர் அவர்களுக்கு Selective Amnesia அல்லது Dementia பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ என்று மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளார். ஏனென்றால், 2014 ஆம் ஆண்டு திரு.சந்திரபாபு நாயுடு, பா.ஜ.க வுடன் கூட்டணியில் இருந்தார், அப்போது அவரை நீங்கள் எந்தளவு அவமானப் படுத்துனீர்கள் என்பதை நாங்கள் மறக்கவில்லை. அமைச்சரவையில் இது அல்லது அது என்பதுபோல் அவர்களுக்கு தேர்ந்தெடுக்க வாய்ப்பளித்தீர்கள். ஆனால்அவர்களுக்கு எந்த துறை ஒதுக் கப்பட்டது என்பது பதவிபிரமாணம் நிகழ்ச்சியின்போது தான் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அப்போதும் இதே விமான போக்குவரத்துத்துறைதான் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதமர் அவர்களை சந்திக்க சந்திரபாபு நாயுடு அவர்கள் நேரம் கேட்டார், அதாவது பிரதமர் மோடி அவர்களை சந்திக்க நான்கு மாதங்கள் அவர் காத்திருக்க வேண்டியிருந்தது. அதுவும் அவர் எதற்காக நேரம் கேட்டார்? ஆந்திர மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்துவதற்காக.

> ### ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்!
>
> **"ஒன்றிய அரசு தமிழ்நாட்டை ஏன் வஞ்சிக்கிறது. எங்களது மக்களுக்குத் தேவையான திட்டங்களை வழங்க ஏன் மறுக்கிறது. தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டிற்கு சுற்றுலா வந்துவிட்டு சகோதர, சகோதரிகளே என்று கூறி ஏமாற்றினால் மட்டும் போதாது, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களைச் செய்ய வேண்டும். இப்படி தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் செயலை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்."**

### சந்திரபாபு நாயுடுவை அவமானப்படுத்தியவர் மோடி!

இன்று வரை சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு என்ன வழங்கியுள்ளீர்கள். 2019 ஆம் ஆண்டு திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் உங்கள் கூட்டணியில் இல்லை, பிரதமர் அவர்கள் ராஜமஹேந்திரவரத்தில் நடைபெற்ற மாநாட்டில், "போலவரம் திட்டம்" சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு அவரது மகனுக்கும் ஒரு ATM என்று கூறினார். இப்போது அவரது ஆதரவு உங்களுக்கு தேவை என்ற நிலை வந்த பின்பு, அந்த ATM நாட்டிற்கே மிக முக்கியமான இயந்திரமாகிவிட்டது.

### பீகாரில் ஊழல்வாதிகளை ஊக்குவிப்பதா?

பீகாரில் ஒரே மாதத்தில் பதினைந்து பாலங்கள் இடிந்து விழுந்துள்ளது. சாதாரணமாக ,சங்க் பரிவார் சார்ந்தவர்கள், இந்நேரம் "ஊழல், ஊழல் " ஊழலால் தான் பாலங்கள் இடிந்து விழுந்தது, உடனடியாக CBI மற்று அமலாக்கத்துறை இதனை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று இந்நேரம் ஆர்ப்பாட்டம் செய்திருப்பார்கள். ஆனால் இம்முறை பா.ஜ.க அரசு என்ன செய்துள்ளது. ரூ.26000 கோடி புதிய பாலங்கள் மற்றும் சாலை அமைக்க வழங்கியுள்ளது. இந்த பா.ஜ.க தனது அரசை தக்கவைத்துக்கொள்ள பீகாரில் உள்ள ஊழல்வாதிகளை ஊக்குவிப்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்.

இந்தியா போன்ற வளரும் நாடு மக்கள் நலத்திட்டங்களுக்கு பெரிதாக செலவளிக்க வேண்டும் ஏனென்றால், வறுமையை ஒழிப்பதற்கும், சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், இல்லாதவர்களுக்கு ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதற்கும், இதுவே சிறந்த வழியாகும்,

இந்த அரசாங்கமோ எப்போது இதைப் பற்றி பேசினாலும், கடந்த ஆண்டை ஒப்பிட்டு, இந்த ஆண்டு அதிகமாக செலவிட்டுள்ளோம் என்றே கூறிக்கொள்வார்கள். இந்த ஆண்டு மக்கள் நலத்திட்டங்களுக்கு 12.8 சதவீதம் அதிகமாக செலவளித்துள்ளோம், கல்வித்துறைக்கு 9.4 சதவீதம் அதிகமாக செலவளித்துள்ளோம், மருத்துவத்திற்கு 5.8 சதவீதம் அதிகமாக செலவளித்துள்ளோம் என்றெல்லாம் கூறி வரலாற்றிலே இம்முறை தான் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம் என்று பெருமை பேசிக் கொள்வார்கள். ஆனால் புள்ளி விவரங்களை கவனமாக பார்த்தால் உண்மை வெளியே வந்துவிடும். மக்கள் நலத்திட்டங்களை தனி செலவுகளாக பார்க்காமல் அரசாங்கத்தின் மொத்த செலவின் ஒரு பங்காக பார்க்க வேண்டும். அவ்வாறு பார்த்தால் எளிதாக புரியும்.

2017-18 ஆம் ஆண்டுகளில் பார்த்தால், கல்வித்துறைக்கு அரசாங்கத்தின் மொத்த செலவில் 1.9 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது பார்த்தால் 2023-24 ஆம் ஆண்டில் பார்த்தால் 1.7 சதவீதமாக குறைந்துள்ளது. மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறைக்கான 0.8 சதவீதத்திலிருந்து 0.6 சதவீதமாக குறைந்துள்ளது. பட்டியலின, பழங்குடியின மக்கள் மற்றும் சிறுபான்மையினருக்கான நலத்திட்ட ஒதுக்கீடுகள் 0.16 சதவீதத்திலிருந்து 0.13 சதவீதமாக குறைந்துள்ளது.

### மக்கள் தொகை கணக்கெடுப்பு என்ன ஆயிற்று!

மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து ஒரு வார்த்தை கூட இந்த பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. இதுவே தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த தரவுகள் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட ஐந்தாவது நிதிநிலை அறிக்கை ஆகும்.

சுதந்திரத்திற்கு பிறகு மக்கள் தொகை கணக்கெடுக்க முடியாத ஒரே அரசாங்கம் பா.ஜ.க அரசுதான். கொரோனா பெருந்தொற்று காலமான மூன்று ஆண்டுகளில் கூட உங்களால் மக்கள் தொகை கணக்கெடுப்பை உங்களால் மேற்கொள்ள முடியவில்லை. எத்தனையோ விஷயங்களில் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டும், நாட்டிலேயே நாங்கள் தான் 5வது பெரிய பொருளாதாரம் கொண்ட நாடு என்று பெருமைக் கொள்கிறீர்களே, கொரோனா பெருந்தொற்று காலங்களுக்கு 143 நாடுகள் மக்கள் தொகை கணக்கெடுப்பை வெற்றிகரமாக மேற்கொண்டுவிட்டனர். நாட்டில் எந்தெந்த பகுதியில் எவ்வளவு மக்கள் உள்ளனர் என்று எந்த தரவுகளும் இல்லாத ஒரே அரசு இதுவே ஆகும். உங்களிடமிருந்து எப்படி நல்ல திட்டங்களை எதிர்பார்க்க முடியும். உங்களது கூட்டணி கட்சிகள், ஜாதிவாரியான கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதனால் தான் நீங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள தயங்குகிறீர்கள் என்று தோன்றுகிறது.

இந்த நிதிநிலை அறிக்கை ஏழைகளுக்கு ஏமாற்றமே, பெருகிவரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்ய எந்த நடவடிக்கையுமே மேற்கொள்ளவில்லை.

2004 ஆம் ஆண்டில், முனைவர் மன்மோன் சிங்க் பிரதமராக பொறுப் பேற்றபோது, இந்திய பொருளாதாரத்தின் GDP 54.8 இலட்சம் கோடிகள், 2014 இல் அவரின் பதவி காலம் முடியும்போது, GDP 105.27 கோடிகள், அதாவது இரண்டு மடங்காக உயர்த்தி இருந்தார். நரேந்திர மோடி அவர்கள் அதே ஆண்டில் தான் பொறுப்பேற்றார். GDP சாதாரணமாக 10 வருடங்களுக்கு ஒருமுறை இரட்டிப்பாக வேண்டும். ஆனால் 2024 இல் 200 இலட்சம் கோடி இருக்க வேண்டிய GDP வெறும் 173.82 இலட்சம் கோடியே இருக்கிறது. இதுவே உங்கள் அரசு பெருமை கொள்ளும் அளவு நீங்கள் செயல்படவில்லை என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

நிதிநிலை அறிக்கைகள், வளர்ச்சியைத் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கும். இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2023-24ஆம் நிதியாண்டில் இல் 8.2 சதவிகிதம் வளர்ச்சியடைந்துள்ளது, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 7 சதவிகிதத்திற்கும் அதிகமான வளர்ச்சியைக் குறிக்கிறது என்று பொருளாதார ஆய்வு கூறுகிறது.

இந்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 6.5 முதல் 7 சதவீதம் வரை இருக்கும் என்று தெரிவிக்கிறது. வளர்ச்சி என்றால் என்ன? பொருளாதாரத்தின் அளவு அதிகரிப்பது மட்டுமா அல்லது பொருளாதார வளர்ச்சியின் மூலம் பெறப் பட்ட செல்வம், அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடைவதா?

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மூலம் யார் உண்மையாகவே பயனடைகிறார்கள்? மிகுந்த வறுமையில் வாழும் 3.44 கோடி மக்களுக்கு என்ன பலன் சென்ற டைகிறது? பணவீக்கத்தாலும், உணவு பொருள் விலை அதிகரிப்பாலும், மிகவும் பாதிக்கப்படுவது இந்த மக்கள் தானே? பணவீக்கம் ஒரு அளவிற்கு குறைந்தாலும், உணவுப் பொருள் விலை ஏறிக்கொண்டேதான் இருக்கிறது. அதுவும் கடந்த ஜூன் மாதம் 9.4 சதவீதமாக இருக்கிறது.

### ஆங்கிலேயர்கள் காலத்தை விட மோசமானது!

கடந்த 10 ஆண்டு கால பா.ஜ.க crony capitalist ஆட்சியில், பொருளாதார ஏற்றத்தாழ்வு விரிவடைந்து கொண்டேதான் இருக்கிறது. 2020ஆம் ஆண்டு, கொரோனா பெருந்தொற்று காலத்தில் கோடிக்கணக்கான மக்கள் வறுமைக் கோட்டிற்குகீழ் தள்ளப்பட்ட போதிலும், பிரதமர் மோடி அவர்களின் நண்பர்கள், அதாவது நாட்டின் பெரும் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் அதிகரித்துள்ளது. நம் நாட்டின் பத்து சதவீத மக்கள் தொகை 77 செல்வத்தை வைத்துக் கொண்டிருக்கிறது என்று பல ஆய்வுகள் கூறுகின்றது. 2022 - 23ஆம் ஆண்டில் நம் நாட்டின் மொத்த வருவாயில் 22.6 சதவீதமும், மொத்த செல்வத்தின் 40 சதவீதமும், மொத்த மக்கள் தொகையின் ஒரு சதவீத மக்களிடம் மட்டுமே குவிந்துள்ளது. இது ஆங்கிலேயர்கள் ஆண்ட அடிமைப்பட்ட காலத்தை விட மோசமானதாக இருக்கிறது.

ஆண்டிற்கு 2 கோடி வேலைவாய்ப்பு கொடுப்பேன் என்று கூறினீர்கள், ஆனால் நடப்பதோ அதற்கு எதிர்மாறாய் உள்ளது. 2018 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பின்மையின் சதவீதம் 45 ஆண்டுகளில் காணாத அளவிற்கு 6.1 சதவீதம் மற்றும் இளைஞர்களின் வேலைவாய்ப் பின்மை 17.8 சதவீதமாக இருந்தது. இது கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பே. எனவே, நீங்கள் உலக பொருளாதாரத்தை காரணம் கூற இயலாது. இன்றைய நிலமையோ அதைவிட மிக மோசமாக உள்ளது.

ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சகம் கூறும் அறிக்கையின்படி, 15 வயதிற்கு மேற்பட்டவர்களின் வேலைவாய்ப் பின்மை சதவீதம் 2021 இல், 4.2 சதவீதம், 2022 இல் 4.1 சதவீதம் மற்றும் 2023 இல் 3.2 சதவீதம். ஆனால்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்